வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 05.06.2026 வெள்ளிக்கிழமை | இதழ் : 150 | பக்கங்கள் : 08



## செம்மணி புதைகுழியில் நேற்றும் 8 எலும்புக் கூடுகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜூன். 05

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று வியாழக்கிழமை புதிதாக 08 என்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புக்கூட்டு தொகுதியில் 07 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வு பணியின் 16ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றன.

அதன்போது 08 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே

07

# எதிரணியினர் பொய்ப் பிரசாரம் மிக ஸ்திரமான நிலையில் அரசு!

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பதில்



கொழும்பு, ஜூன். 05

தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவே நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட் டுள்ளது என்றும், ஆட்சி கவிழப்போகின்றது என்றும் எதிரணிகள் திட்ட மிட்ட பிரசாரங்களை முன் னெடுத்து வருகின்றன என்று ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தற்போதைய அரசு மிகவும் ஸ்திரமான நிலையில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளது என்றும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நடந்தது போன்று தற்போதைய அரசும் கவிழும் என்றும் எதிரணி உறுப்பினர்கள் சிலர் தெரிவித்து வரும் கருத்துக்கள் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடையும் என எதிரணிகள் முதலில் கூறின. அது நடக்காமல் போனதும், பின்னர் மார்ச் மாதத்தில் வீழ்ச்சியடையும்

07

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வடமாகாண ஆளுநருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜூன். 05

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று வியாழக்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது,

07

## தீவக மக்களுக்கு இந்தியாவால் கிடைக்கும் பசுமை ஆற்றல் திட்டம் ஒகஸ்ட்டில் ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 05

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, அனலை தீவு மற்றும் நயினாதீவு ஆகிய தீவுகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, இந்தியாவின் 11 மில்லியன் டொலர் முழுமையான மானிய நிதியுதவியுடன் அதிநவீன புதுப்பிக்கத் தக்க வலுசக்தித் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நெடுந்தீவில் அமைந்துள்ள திட்டப் பகுதிக்கு நேரடியாகச் சென்று கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்ட பின்னர் சமூகவலைத்தளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ள இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, இந்த திட்டத்தின் முதற்கட்ட செயல்பாடுகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துக்குள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரதான மின்விநியோகக்

07

## எழுச்சிப் பாடல் தொடர்பில் கைதாகிய இளைஞர் சார்பில் உயர்நீதிமன்றில் மனு!

யாழ்ப்பாணம், ஜூன். 05

எழுச்சி பாடலை பாடினார் என்ற குற்றச்சாட்டில் தமிழ் சொல்லிசை கலைஞர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த இளைஞன் சார்பில் உடனடியாக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சொல்லிசை கலைஞர் சங்கீதனை சந்தித்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடிய ஜனாதிபதி சட்டத்தரணி

07

## சர்வாதிகாரத்தை நோக்கி நகரும் அநுர அரசாங்கம்!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 05

மாகாணசபைத் தேர்தலை நடத்தாது ஏமாற்றி வரும் தற்போதைய அரசாங்கம், சுயாதீன ஆணைக் குழுக்கள் மற்றும் நீதித்துறையின் அதிகாரங்களுக்குள் தலையிட்டு நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பை முழுமையாக அழித்து ஒரு சர்வாதிகாரப் பயணத்தை நோக்கி நகர்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண

07

## தமிழரசுவின் பிரச்னைகளை கட்சிக்குள்ளேயே தீர்ப்போம்!

### கூறுகின்றார் சிறீதரன் எம்.பி.



கிளிநொச்சி, ஜூன் 05

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் உள்ள பிரச்னையை கட்சிக்குள்ளேயே தீர்க்க முயல்வோம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி கட்சி அலுவலகத்தில் நடந்த ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது கத்தோலிக்க மதகுருமார்கள் மத்தியில் பேசுபொருளாக இருக்கும் அருட்தந்தை ஜீவந்த பிரீஸ் மே 18அன்று நினைவேந்தல் நிகழ்வில் தமிழர்களுக்கு நடந்தது, இனப்படுகொலை என்பதை தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் சகோதர மொழி பேசக்கூடிய ஒருவர் இவ்வாறு சொல்கின்ற விடயம் முக்கியமானது. நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக மிகவும் துணிச்சலாக 146,000பேர் இறந்த மற்றும் காணாமல் போனமை தொடர்பாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருந்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பேசி வரும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தமிழர்களுக்கு நடந்த அநியாயங்களை பற்றி பேசவில்லை.

ஆட்சி மாறினாலும் முன்னைய மகிந்த,

07

## அவசர ஆட்சிக் கவிழ்ப்பு எங்களின் இலக்கு அல்ல!

### சுதந்திரக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 05

“தேசிய மக்கள் சக்தி ஆட்சியை அவசரமாகக் கவிழ்ப்பதற்கு கூட்டு எதிரணி முற்படவில்லை. அதற்குரிய தேவைப்பாடும் கிடையாது. மாறாக அரசாங்கத்தின் தவறுகளையே சுட்டிக்காட்டிவருகின்றோம்.”

-இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், கூட்டு எதிரணி உறுப்பினருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

07

## அரசியலுக்காகப் பயன்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம்!

### நாமல் ராஜபக்ஷ கண்டனம்

கொழும்பு, ஜூன். 05

அரசாங்கத்தினால் பயங்கரவாதத் தடைச்சட்டம் பாரபட்சமான முறையில், அரசியல் தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்தப்பட்டு வருவதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் கடுமையாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போதைய ஆட்சியின் இத்தகைய இரட்டை நிலைப்பாடு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமியின் கை துண்டிக்கப்பட்ட வழக்கு; காலத்தை இழுத்தடிக்கின்றது பொலிஸ்!

## யாழ். மேலதிக நீதவான் கண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 05

சிறுமி வைஷாலியின் கை அகற்றப்பட்ட வழக்கில், காலத்தை இழுத்தடித்து - நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்கும் பொலிஸாரின் போக்கைக் கண்டித்த நீதிமன்றம், குறுகிய காலத்தில் இறுதி அறிக்கையை வழங்கவேண்டும் என்று பொலிஸாருக்குக் கட்டளையிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் சாண்டில்யன் வைஷாலி என்ற சிறுமி காய்ச்சல் மற்றும் தோலில் ஏற்பட்ட தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவருக்கு மணிக்கட்டில் ஊசி மூலம் மருந்து செலுத்தப்பட்டது. ஓரிரு நாள்களில் மணிக்கட்டு வீக்கமடைந்து பின்னர் அந்தப் பகுதி வெட்டி அகற்றப்பட்டது.

இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டியதுடன், பல்வேறு தரப்பினரிடம் தமக்கான நீதியையும் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில், மேலதிக நீதவான் நஜ்மி ஹூசைன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கின் கடந்த தவணையில், "இந்த வழக்குத் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையொன்றை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளோம். எனவே அவரின் ஆலோசனையைப் பெறுவதற்கான நீண்ட கால அவகாசத்தை நீதிமன்றம் வழங்கவேண்டும்" என்று பொலிஸார் நீதிமன்றில் கோரியிருந்தனர்.

ஏற்கனவே இந்த வழக்கு இரண்டு வருடங்கள் கடந்துவிட்டதைச் சுட்டிக்காட்டிய நீதிபதி, நீண்ட தவணையை வழங்க மறுத்து, சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கான கால அவகாசத்தின் பொருட்டு நேற்று முன்தினம் வரை வழக்கை நீதிவான் தவணையிட்டார்.

நேற்று முன் தினம் வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, வழக்குத் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை இதுவரை சட்டமா அதிபருக்கு அனுப்பப்படவில்லை என்றும், கொழும்பில் உள்ள பொலிஸ் சட்டக் கல்லூரி ஊடாக இனிமேல்தான் சட்டமா அதிபருக்கு விசாரணை அறிக்கை அனுப்பப்படவுள்ளது என்றும் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி சார்பாக மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி எஸ்.கே. புரந்தரன், மன்றை பொலிஸார் தவறாக வழிநடத்துகின்றனர் என்றும், வழக்கை காலம் தாழ்த்திக் கொண்டு செல்வதற்கு நீதிமன்றம் அனுமதிக்கக் கூடாது என்றும் கோரினார்.

கடந்த வழக்குத் தவணையில் முழுமையான விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று கூறி நீண்ட தவணை கோரிய பொலிஸார், தற்போது விசாரணை அறிக்கை இன்னமும் அனுப்பப்படவில்லை என்று குறிப்பிடுவதையும் சுட்டிக்காட்டினார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு நீதிமன்றம் ஒரு கால எல்லையைப் பொலிஸாருக்கு வழங்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை முன்வைத்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதவான், இந்த வழக்கில் பொலிஸாரின் போக்கைக் கடுமையாகக் கண்டித்தார். இந்த வழக்கின் ஆரம்பத்தில் இருந்து மாறுபட்ட தகவல்களையே தெரிவித்து வருகின்றனர்.

வழக்குத் தொடுநர் தரப்பான பொலிஸ் தரப்பில் இருந்து ஒவ்வொரு வழக்கு தவணையின் போதும் மேலதிக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாரின் செயற்பாடுகள் காலத்தை இழுத்தடிப்புச் செய்து நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்குவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு குந்தகம் விளைவிப்பனவாகவும் அமைகின்றன.

இறுதி விசாரணை அறிக்கையை யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகம் குறுகிய காலத்தில், இல்லாவிட்டால் அடுத்த தவணையில் வழங்க வேண்டும். நீதிமன்ற வழக்குக் குறிப்பேடுகளை வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பவேண்டும் என்று நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

# ஓட்டோவின் மீது மரம் முறிந்து வீழ்ந்து பாடசாலை மாணவர் உட்பட மூவர் பலி!

கொழும்பு, ஜூன். 05

கண்டி மாவட்டம் நாவலப்பிட்டி - மாபாகந்த பகுதியில் ஓட்டோ மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில், அதில் பயணித்த பாடசாலை மாணவர் உட்பட மூவர் உயிரிழந்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை இந்த விபத்து நேர்ந்துள்ளது.

பிரதான வீதிக்கு அருகில் இருந்த இந்த பெரிய மரம் முறிந்து வீழ்ந்ததில் ஓட்டோவில் இருந்த மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அதன் சாரதி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# குவைத் விமான நிலைய தாக்குதல் மூன்று இலங்கை பிரஜைகள் காயம்

கொழும்பு, ஜூன். 05

குவைத் சர்வதேச விமான நிலையத்தை இலக்கு வைத்து ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதல்களில் காயமடைந்தவர்களில் மூன்று இலங்கை பிரஜைகளும் அடங்குவதாக இலங்கை தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலில் இந்தியர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக குவைத் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்த தாக்குதலினால் விமான நிலையத்தின் சில பகுதிகள் மற்றும் அருகிலுள்ள தூதரக வசதிகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. (அ)

# சங்கானை பிரதேச வைத்தியசாலையின் குறை நிறைகளை ஆராய்ந்தார் சிறீதரன்!

யாழ்ப்பாணம், ஜூன். 05

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது, வைத்தியசாலையின் குறை நிறைகளை கேட்டறிந்து கொண்டதுடன், நோயாளர் விடுதி உள்ளிட்ட வைத்தியசாலையின் வெளி வளாகப் பிரதேசங்களையும் அவர் நேரில் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, சங்கானை பிரதேச



வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்துவது தொடர்பாக தன்னாலான முழுமையான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என பிரதேச வைத்திய அதிகாரியிடம் அவர் உறுதியளித்தார்.

இதன்போது, பிரதேச வைத்திய அதிகாரி மருத்துவர் க.சசிதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# முதியோர் பராமரிப்பு நிலைய தீ விபத்தில் 12 பேர் உயிரிழப்பு!

## ஏழு பேர் வைத்தியசாலையில் களுத்துறையில் துயரச் சம்பவம்

கொழும்பு, ஜூன். 05

களுத்துறை மாவட்டம் அங்குருவாதொட, பட்டகொட பகுதியில் உள்ள முதியோர் பராமரிப்பு நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காணாமல் போயுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் காயமடைந்த 7 பேர் தற்போது ஹொரணை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் அந்த மையத்தில் இருந்த சுமார் 51 பேர் எவ்வித ஆபத்துகளுமின்றி பாதுகாப்பாக மீட்கப்பட்டு, தற்போது பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அங்குருவாதொட, படகொட பகுதியில் அமைந்துள்ள முதியோர் பராமரிப்பு நிலையத்தில் நேற்று முன் தினம் மாலை இந்தத் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

தீயணைப்புப் படையினர் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், இந்தத் தீ விபத்தினால் அந்த மையத்துக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்து ஏற்பட்ட சமயத்தில் அந்த இல்லத்துக்குள் சுமார் 72 பேர் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனமாக நடத்தப்பட்டு வந்த இந்த மையத்தில், மனநலக் குறைபாடுடைய நபர்களும் தங்கியிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீ விபத்து காரணமாக இல்லத்தில் இருந்த சிலர் தீயில் கருகியுள்ளனர்.

அவ்வாறு தீயில் கருகிய 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மற்றைய இருவர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# களுத்துறையில் தீ விபத்து; இல்லப் பணிப்பாளர் கைது

யாழ்ப்பாணம், ஜூன். 05

தீப்பரவல் ஏற்பட்ட ஹொரணை அங்குருவாத்தொட்ட, பட்டகொட முதியோர் இல்லத்தின் பணிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள நபரை ஹொரணை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# நயினாதீவு சென்றார் இந்தியத் தூதுவர்!



யாழ்ப்பாணம், ஜூன். 05

வடக்குக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தையும் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ் இந்திய துணைத் தூதர் சாய் முரளி மற்றும் தூதரக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
05.06.2026 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# உயர்நிலை நீதிபதிகளின் பதவிக்கால நீடிப்புக்கு தற்போது அவசியம் என்ன?

மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதெல்லையை அதிகரிப்பதற்கான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் திட்டத்துக்கு சட்ட நிபுணர்கள், சிவில் சமூக அவதானிகள் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடமிருந்து கடுமையான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது.

ஓய்வுபெறும் வயதெல்லையை நீடிப்பதன் மூலமாக அனுபவம் வாய்ந்த சட்ட நிபுணர்களான நீதிபதிகளை தொடர்ந்தும் சில வருடங்கள் சேவையில் வைத்திருக்க முடியும் என்றும் தேங்கிக் கிடக்கும் பெருந்தொகை வழக்குகளைக் கையாள முடியும் என்றும் அரசாங்கத்தின் திட்டத்தை ஆதரிப்பவர்கள் ஒருபுறத்தில் கூறுகின்ற அதேவேளை, அதை எதிர்ப்பவர்கள் நீதித்துறையின் சுதந்திரம், நீதித்துறை பற்றிய பொதுமக்களின் பார்வை மற்றும் அரசியலமைப்பு ரீதியான ஆட்சிமுறை போன்ற விடயங்களை மையமாக வைத்து மறுபுறத்தில் தங்கள் வாதங்களை முன்வைக்கிறார்கள்.

அரசாங்கம் அதன் திட்டத்தை முன்வைக்கின்ற காலப்பகுதியை சட்டத்துறை சார்ந்தவர்களும் சிவில் சமூகத்தவர்களும் சந்தேகத்துடன் பார்க்கின்றனர். தற்போதைய பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சுரசேன எதிர்வரும் டிசம்பரில் ஓய்வு. பெறவிருக்கும் நிலையில், அந்த காலஎல்லைக்கு முன்னதாக உயர்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிப்பதற்காக அரசியலமைப்புக்கு திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவது அவரினதும் குறிப்பிட்ட சில நீதிபதிகளினதும் பதவிக் காலத்தை மேலும் இரு வருடங்கள் நீடிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் ஒரு நகர்வாகவே பார்க்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரின் தலைமையிலான அரசாங்கம் இடை நடுவில் உயர்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் பதவிக் காலம் தொடர்பான விதிகளில் மாற்றங்களைச் செய்ய முயற்சிக்கும் போது அதை சலுகை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு நகர்வாக எதிர்ப்பாளர்கள் நோக்குகிறார்கள். அத்துடன் அரசியல் செல்வாக்கில் இருந்து நீதித்துறை முற்றிலும் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படைத் தத்துவத்தை இது சமரசம் செய்கிறது என்றும் அவர்கள் வாதிடுகிறார்கள்.

உயர்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் சேவை வயதை நீடிப்பதற்கான எந்த அழுத்தமும் நடைமுறைத் தேவையும் இல்லை என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கூறியிருக்கிறது. தற்போது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளினதும் உயர்நீதிமன்ற நீதிபதிகளினதும் ஓய்வுபெறும் வயதெல்லைகள் முறையே 63 ஆகவும் 65 ஆகவும் இருக்கிறது.

2020ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான 20 வது திருத்தத்தின் கீழ் உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கை 11 இல் இருந்து 17 ஆகவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 12இல் இருந்து 20ஆகவும் அதிகரிக்கப்பட்டதை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கும் சட்டத்தரணிகள் சங்கம் அதிகரித்துவரும் வழக்குச் சுமையை கையாளுவதற்காக நீதித்துறை மனிதவளம் போதுமானதாக இருப்பதால் பதவிக்கால நீடிப்பு தேவையற்ற ஒன்று என்று வாதிடுகிறது.

உயர்நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் ஏற்கெனவே இருக்கும் நீதிபதிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல மாதங்களாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற ஒரு முறைப்பாடு இருக்கிறது. அதை நிவர்த்தி செய்வதில் அக்கறை காட்டாமல் அரசாங்கம் உயர்நிலை நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிக்க அரசியலமைப்புக்கு திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதில் நாட்டம் காட்டுவது இயல்பாகவே சந்தேகத்தை கிளப்பவே செய்யும். அரசாங்கம் இது குறித்து தெளிவாக நாட்டுக்கும் மக்களுக்கும் விளக்கமளிக்க கடமைப்பட்டிருக்கிறது.

# லெபனான் மீதான டிரம்ப்பின் பார்வை; பொதுமக்களுக்குத் தேவை நிரந்தர அமைதியே தவிர, தற்காலிகத் தீர்வுகள் அல்ல



ஈரானுடனான போரிலிருந்து வெளியேற வழிதேடும் அமெரிக்க ஜனாதிபதி, இஸ்ரேல் தீவிரப்படுத்தியிருக்கும் தாக்குதலைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறார். ஆனால், மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு அவ்வளவு எளிதில் முடிவுக்கு வராது.

இஸ்ரேலின் தீவிரமடைந்த இராணுவத் தாக்குதலைத் தொடர்ந்து, லெபனானில் பதற்றத்தைத் தணிப்பதற்கான தனது முயற்சிகள் குறித்து, "இது எவ்வளவு காலம் நீடிக்கும் என்று பார்ப்போம்," என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இவ்வார தொடக்கத்தில் தனது "ட்ரூத் சோஷியல்" (Truth Social) தளத்தில் எழுதினார்.

ஆனால், அடுத்த சில மணி நேரங்களிலேயே, தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய ட்ரோன் (ஆளில்லா விமானம்) தாக்குதலில் ஒரு தந்தை மற்றும் அவரது இரு குழந்தைகள் உட்பட எட்டு பேர் கொல்லப்பட்டனர் ஒரு மருத்துவமனையும் சேதமடைந்தது.

ஹெஸ்புல்லா அமைப்பும் தொடர்ந்து ராக்கெட்டுகளையும் ட்ரோன்களையும் ஏவி வந்தது. தான் தொடங்கிய ஈரானுக்கு எதிரான சட்டவிரோதப் போரிலிருந்து தப்பிக்க ஆர்வமாக இருக்கும் அமெரிக்க ஜனாதிபதி இஸ்ரேலின் இந்தத் தாக்குதல் காரணமாக அமைதிப் பேச்சுவார்த்தைகளை நிறுத்தி வைக்கப் போவதாகத் ஈரான் அச்சுறுத்தியதை அடுத்து, பெஞ்சமின் நெதன்யாகுவைக் கட்டுப்படுத்தினார் தற்போதைக்கு மட்டும். இது கெட்ட வார்த்தைகள் கலந்த ஒரு தொலைபேசி அழைப்பாக விவரிக்கப்பட்டது.

ட்ரம்ப்பின் சமூக ஊடகப் பதிவு, வழக்கத்திற்கு மாறாகத் தனது சந்தேகத்தை ஒப்புக் கொண்ட போதிலும், எட்டப்பட்ட உடன்பாட்டை இன்னும் மிகைப்படுத்தியே காட்டியது. ஹெஸ்புல்லாவும் இஸ்ரேலும் "அனைத்து துப்பாக்கிச் சூடுகளையும் நிறுத்த" ஒப்புக்கொண்டதாக அவர் கூறினார். ஆனால் லெபனான் ஜனாதிபதி மாளிகை மிகவும் வரையறுக்கப்பட்ட ஒரு ஒப்பந்தத்தையே சுட்டிக் காட்டியது.

ஹெஸ்புல்லா இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தவில்லை என்றால், இஸ்ரேல் பெய்ரூட்டின் தெற்குப் புறநகர்ப் பகுதிகளைத் தாக்காது என்பதே அது.

ஏற்கனவே ஒரு போர்நிறுத்தம் நடைமுறையில் இருக்க வேண்டிய சூழலில், மக்கள் இன்னும் பதற்றத்தைக் குறைப்பது பற்றிப் பேசிக் கொண்டிருப்பது இந்த மோதலின் கொடூரத்தை எடுத்துக் காட்டுகிறது. இந்த தற்காலிகப் போர்நிறுத்தம், லெபனானில் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கணக்கானோரை இஸ்ரேல் கொல்வதைத் தடுக்கவில்லை.

மேலும் மே மாத இறுதியில் இஸ்ரேல் தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியிருந்தது. ட்ரம்ப்பின் தலையீடு செவ்வாயன்று அது எவ்வளவு காலம் நீடித்தாலும் இறப்பு விகிதத்தைக் குறைக்க வழிவகுத்ததாகத் தோன்றுகிறது.

அக்டோபர் மாதம் இஸ்ரேலில் தேர்தல் வரவிருப்பதாலும், அவரது கூட்டணியில் உள்ள எதிர்ப்பாளர்களும் தீவிர வலதுசாரி உறுப்பினர்களும் ஹெஸ்புல்லா மீது தீவிரத் தாக்குதலை நடத்தக் கோருவதாலும், நெதன்யாகு தான் பின்வாங்கியதை ஒப்புக் கொள்ளவில்லை. மேலும், தெற்கில் இஸ்ரேல் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் கூறினார்.

ட்ரம்ப்பின் கவனம் மீண்டும் திசை திரும்பும்போது - இந்த வாரம் ஈரான் பேச்சுவார்த்தைகள் "மிகவும் சலிப்படையத் தொடங்கிவிட்டன" என்று அவர் கூறியிருந்தார். இஸ்ரேலிய பிரதமர் தனது அரசியல் வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்ளும் இந்தத் தொடர் போருக்கு (permawar) மீண்டும் திரும்புவார் என்றே தோன்றுகிறது.

ஈரானின் உள்கட்டமைப்புகளுக்கு இஸ்ரேல் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், முக்கிய நபர்களையும் கொன்றுள்ளது. கடந்த 26 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு லெபனானுக்குள் மிக ஆழமாக முன்னேறியுள்ளதுடன், ஞாயிற்றுக்கிழமை "போஃபோர்ட் கோட்டையை" (Beaufort Castle) அவர்கள் கைப்பற்றியது லெபனான் குடிமக்களுக்கு ஒரு உளவியல் ரீதியான ஆதிக்கச் செய்தியை அனுப்புகிறது.

இருப்பினும், ஈரான் ஆட்சியை வீழ்த்துவது மற்றும் ஹெஸ்புல்லாவின் அச்சுறுத்தலை அழிப்பது ஆகிய தனது நோக்கங்களில் இஸ்ரேல் தோல்வியடைந்துள்ளது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பால் உருவான ஒரு அமைப்பை, அதே ஆக்கிரமிப்பால் முடிவுக்குக் கொண்டு வர முடியாது. வீடுகளையும் பொதுமக்களின் உள்கட்டமைப்புகளையும் அழிப்பது, லெபனான் அரசை நீண்டகாலமாக பலவீனப்படுத்தி வரும் ஒரு குழு (ஹெஸ்புல்லா), நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பவராகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவே வழிவகுக்கிறது.

மேலும் இராணுவ ரீதியாக, லெபனானில் உள்ள இஸ்ரேலிய வீரர்களுக்கும் வடக்கு இஸ்ரேலில் உள்ள குடிமக்களுக்கும் ஹெஸ்புல்லாவின் வெடிக்கும் ட்ரோன்களால் அதிகரித்து வரும் அச்சுறுத்தலை எதிர்கொள்ள இஸ்ரேல் இப்போது திணறி வருகிறது.

இந்தப் போரை எந்தளவுக்கேனும் தணிக்க வேண்டியது லெபனான் குடிமக்களுக்கு மிக அவசரமாகத் தேவைப்படுகிறது. அங்குள்ள மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் இடம் பெயர்ந்துள்ளனர்: திங்கள்கிழமை அன்று பெய்ரூட்டின் தெற்குப் புறநகர்ப் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கானோர் வெளியேறினர். அதே நேரத்தில் தெற்கில் உள்ள கிராமங்களை இஸ்ரேல் தரைமட்டமாக்கி வருவதால், இன்னும் பலரின் வீடுகள் நிரந்தரமாக அழிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இத்தகைய குறுகிய காலத் தற்காலிகத் தீர்வுகள், அதுவும் இந்தளவுக்கு அரைகுறையானவை, மத்திய கிழக்கில் இஸ்ரேலும் அமெரிக்காவும் கட்டவிழ்த்துவிட்டுள்ள குழப்பத்திற்கும் வன்முறைக்கும் நீண்ட காலத் தீர்வை நோக்கி நகர்த்தாது. ஈரானுக்கு எதிரான அவர்களின் சட்டவிரோதப் போரின் விளைவுகள் நன்கு அறியப்பட்டவை.

மேலும் உலகம் முழுவதிலும் உள்ள சாதாரண மக்கள், குறிப்பாக, வாழ்க்கைச் செலவு உயர்வால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள ஏழை மக்கள், அதன் பாதிப்பை உணர்ந்து வருகின்றனர். ஆனால் இவை அனைத்தையும் விட லெபனான் குடிமக்களே இதனை அதிகம் சகித்துக் கொள்கிறார்கள். வசவு வார்த்தைகள் நிறைந்த தொலைபேசி அழைப்புகளும், சமூக ஊடக மிரட்டல்களும், நீடித்த கவனத்துடனான முழுமையான இராஜதந்திர ஈடுபாட்டுடன் கூடிய ஒரு உண்மையான அமைதிச் செயல்முறைக்கு மாற்றாக முடியாது.

(த கார்டியன் ஆசிரிய தலையங்கம், 2 ஜூன் 2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 05 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 22
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பஞ்சமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும்நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வேலைச்சுமை இருந்து அதிகாரிகளுடன்பனிப்போர்வந்துநீங்கும். பொறுமைதேவை.

**கடகம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**சிம்மம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள்.

**கன்னி**
நட்பு வட்டம் விரியும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**கும்பம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். உடல் அசதி சோர்வு வந்து விலகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மீனம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று கிளிநொச்சியில் சிரமதானப் பணி

கிளிநொச்சி, ஜூன். 05

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பொலிஸாரும், கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் இணைந்து நேற்றுக் காலை கிளிநொச்சியில் ஏ-9 வீதியின் இருபுறங்களிலும் சிரமதானப் பணியை முன்னெடுத்தனர்.

கரடிப்போக்கு சந்தியிலிருந்து இரணைமடுச் சந்தி வரையிலான பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இச்சிரமதானப் பணியின்போது, வீதியின் இருபுறங்களிலும் குவிந்திருந்த பிளாஸ்ரிக் மற்றும் பிற கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டன.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தூய்மையான சூழலை உருவாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்டத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக குணசேகர, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அங்கம்மன, கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முகம்மட் சுல்தான் நஜீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

# விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கலைஞரை சந்தித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்

யாழ்ப்பாணம், ஜூன். 05

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சொல்லிசை கலைஞர் சங்கீதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று பார்வையிட்டனர்.

முன்னணியின் சட்டத்தரணியும் கொள்கைப் பரப்புச் செயலாளருமான என்.காண்டீபன் நேற்று காலை யாழ் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டனர். இதன்போது சங்கீதன் தனது விடுதலை தொடர்பாக தாயாருடன் தொடர்புகொண்டு கலந்துரையாடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

# மன்னார் பொது வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

மன்னார், ஜூன். 05

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்திக் குழு மற்றும் வைத்தியசாலைப் பணிப்பாளரின் விசேட கோரிக்கைக்கு அமைவாக, வைத்தியசாலையின் பயன்பாட்டுக்காக, சுமார் 20 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான அத்தியாவசிய மருத்துவப் பொருள்கள் வழங்கப்பட்டன.

ஜேர்மன் மக்கள் மற்றும் அந்நாட்டு அரசாங்கத்தின் அனுசரணையில்,

*சட்டத்தரணி லுக்மான் சஹாப்தீனின் ஒழுங்கமைப்பில்,* வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினால் இது வழங்கப்பட்டது.

நோயாளிகளுக்கான சக்கர நாற்காலிகள், இயன்முறை மருத்துவ உபகரணங்கள், சேலைன் தாங்கிகள், ஊன்றுகோல்கள் என்பன கையளிக்கப்பட்டன.

குறித்த மருத்துவ உபகரணங்களை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஆஸாத், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார். (அ)

# நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நூலகம் திறந்தார் இந்தியத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜூன். 05

நெடுந்தீவு மகா வித்தியாலய மாணவர்களுக்கான நூலகத்தை, இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று முன்தினம் வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று முன் தினம் நெடுந்தீவுக்கு சென்றபோது நூலகம் திறந்து வைக்கப்பட்டதுடன், நூலகத்துக்குத் தேவையான ஒரு தொகுதி நூல்களும், அதிபரிடம் வழங்கப்பட்டன.

அத்துடன், நூலகத்திற்கான தளபாடங்கள், 100 மாணவர்களுக்கான புத்தக பைகள், கற்றல் உபகரணங்கள், இசைக்கருவிகள் என்பனவும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் இந்திய தூதரக உயர் அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலாளர் ந.பிரபாகரன் என பலர் பங்கேற்றனர். (அ)

# நாகர்கோவில் கிழக்கு காட்டில் "குஷ்" போதைப்பொருள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன். 05

வடமராட்சி நாகர்கோவில் கிழக்கு காட்டுப்பகுதியில் பெரும் தொகையான "குஷ்" போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், நெல்லியடி விசேட அதிரடிப் படையினரின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது, அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த "குஷ்" போதைப்பொருள் அடங்கிய பொதி மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட போதைப்பொருளின் மொத்த நிறை மற்றும் அதன் துல்லியமான சந்தைப் பெறுமதி என்பவற்றை மதிப்பிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கோப்பாய் கலாசாலையில் சுற்றுச்சூழல் தினம்!

யாழ்ப்பாணம், ஜூன். 05

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டிய நிகழ்வுகள் நேற்று முன் தினம் புதன்கிழமை காலை இடம் பெற்றன.

கலாசாலை அதிபர். சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் சூழலியலாளர் தமிழ் தேசிய பசுமை இயக்கத் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

அதிதிக்கான அறிமுக உரையை கலாசாலையில் சிரேஷ்ட விரிவுரையாளர் ... ஆற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்தின் கட்டுப்பாட்டினால் மக்களுக்கான நலத் திட்டங்கள் பாதிப்பு

## பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தகவல்

கொழும்பு, ஜூன். 05

சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்தத் திட்டக் கட்டுப்பாடுகள் காரணமாக, ஏழை எளிய மக்களுக்கான கூடுதல் நலத்திட்ட நிதிகளைப் பொதுத் திறைசேரியிலிருந்து ஒதுக்கீடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நான்கில் ஒரு நபர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாக உலக வங்கி எச்சரித்துள்ள பின்னணியில், வளர்ந்து வரும் பொருளாதார அழுத்தங்களால் நலிவடைந்த மக்களுக்கு கூடுதல் உதவிகள் தேவைப்படுவதை ஏற்றுக்கொண்டுள்ள கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சு, தற்போதைய நிபந்தனைகள் புதிய நிதி ஒதுக்கீடுகளைக் கட்டுப்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளது.

எனினும், அரசாங்கம் முன்னெடுத்து வரும் வாழ்வாதாரம் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்கள் காரணமாக நாட்டில் வறுமை மட்டம் குறைவடைந்து வருவதாகத் தெரிவித்த சமூகப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குக் கூடுதல் சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட "டித்வா" சூறாவளிப் பேரழிவின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கம் பெருமளவு நிதியைச் செலவிட நேரிட்டதாகச் சுட்டிக்காட்டிய அவர், கிராமப்புறங்களில் சுயதொழில் ஊக்குவிப்பு மற்றும் வேலை வாய்ப்புகள் மூலம் ஏழை மக்களின் வாழ்க்கை தரம் மேம்பட்டு வருவதாகக் கூறினார்.

எனினும், இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 24.5 வீதம் முதல் 25 வீதம் வரையிலான மக்கள் இன்னும் வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்கின்றனர் என்ற தனது எச்சரிகையை உலக வங்கி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

(அ)

# வேகமாகப் பரவும் மூளைக்காய்ச்சல்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 05

இலங்கையில் தற்போது டெங்கு, இன்புளுாயன்சா மற்றும் எண்டிரோவைரஸ் மூலமாகப் பரவும் மெனிஞ்சைடிஸ் எனப்படும் மூளைக்காய்ச்சல் போன்ற நோய்த்தொற்றுகள் வேகமாக அதிகரித்து வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏப்ரல் மாத நடுப்பகுதியில் தெனியாய பகுதியில் ஆரம்பமான இந்த மூளைக்காய்ச்சல் தொற்று, தற்போது கண்டி, நுவரெலியா, பதுளை உள்ளிட்ட மத்திய மாகாணத்தின் பல மாவட்டங்களில் பரவி வருகிறது. இதுவரை சுமார் 250 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 50 பேர் வரை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், ஏனை யோர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்போதைய மூளைக் காய்ச்சல் வைரஸ் தொற்றால் ஏற்படுவதால், பாக்டீரியா தொற்றுகளைப் போல கடுமையான நீண்டகால பாதிப்புகளோ அல்லது மரணங்களோ ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு.

இந்த வைரஸ் முக்கியமாக அசுத்தமான நீர் மற்றும் உணவு மூலமாகவே பரவுகிறது. குறிப்பாக, இலங்கையில் இயங்கி வரும் "பொது நீர் திட்டங்கள்" மூலமாகவே இந்த நோய் அதிகமாகப் பரவுவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், பாடசாலை மாணவர்களிடையே இது வேகமாகப் பரவி வருகிறது. எப்போதும் குளோரின் கலக்கப்பட்ட அல்லது காய்ச்சி ஆறவைத்த தூய்மையான குடிதண்ணீரையே பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். உணவுக்கு முன்னரும், பொது இடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்திய பின்னரும், கழிவறையைப் பயன்படுத்திய பிறகும் கைகளை சவர்க்காரம் அல்லது கிருமிநாசினி கொண்டு நன்றாகக் கழுவ வேண்டும். பிள்ளைகளுக்குக் காய்ச்சல், வாந்தி, கடுமையான தலைவலி, வெளிச்சத்தைப் பார்க்க முடியாமை போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்-என்றார்.

# யோஷிதவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன். 05

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித ராஜபக்ஷ தொடர்பான வழக்கை ஜூலை 09ஆம் திகதி வரை ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மறு ஆய்வு மனு காரணமாக சாட்சிய விசாரணைகளை தற்காலிகமாக நிறுத்துமாறு அரச தரப்பு கோரியதையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குகிறார் தயாசிறி?



கொழும்பு, ஜூன். 05

"அனைத்து எதிரணிகளும் ஓரணியில் திரளும் பட்சத்தில் மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவதற்கு தயார்." - என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்துவிட்டு, வடமேல் மாகாண சபைக்கான முதல்வர் வேட்பாளராக போட்டியிடும் எண்ணம் உள்ளதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

மாகாண சபை ஊடாக கிராமிய மக்களுக்கு சேவை செய்வதற்குரிய வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே, முதல்வராக அப்பணியை முன்னெடுப்பதற்கு வாய்ப்பு இருந்தால் அது நல்லது.

நான் முதல்வராக பதவி வகித்துள்ளேன். தற்போது தேசிய அரசியலில் உள்ளேன். எனவே, உரிய வகையில் ஆராய்ந்தே முடிவுகளை எடுக்க வேண்டும்.

அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்தால், பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் போட்டியிடலாம்-என்றார்.

(அ)

# ஜூலை, ஓகஸ்ட்டில் வெப்பநிலை உச்சம்!

கொழும்பு, ஜூன். 05

உலகளாவிய காலநிலையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வரும் "எல் நினோ" காலநிலைத் தாக்கத்தினால், நாட்டில் நடப்பு ஆண்டின் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் வழக்கத்தை விட மிகக் கடும் வெப்பத்துடனான வானிலை நிலவக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமானகே கருத்து தெரிவிக்கையில்-

நாடு தற்போது தென்மேற்கு பருவப் பெயர்ச்சி காலநிலையை எதிர்கொண்டுள்ள போதிலும், எல் நினோவின் நேரடித் தாக்கங்கள் அடுத்த சில வாரங்களில் நாட்டில் தீவிரமடைய ஆரம்பிக்கும்.

வழமையாக ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நாட்டில் மழைவீழ்ச்சி குறைவடையும் சாத்தியக்கூறுகள் காணப்படுவது இயல்பானதாகும். எனினும், உலக அளவில் தற்போது உருவாகி வரும் தீவிர "எல் நினோ" நிலைமைகளால், இம்முறை இந்த இரண்டு மாதங்களிலும் மழைவீழ்ச்சி மிக மிகக் குறைந்தளவிலேயே பதிவாகலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன் நேரடி விளைவாக, ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நாட்டின் வெப்பநிலை வழமையான சராசரி அளவை விட மிக அதிகமாக நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இந்த இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்வதற்காக, அரசாங்கத்தின் பல்வேறு உயர் மட்டத் திணைக்களங்களை ஒன்றிணைத்து அவசரக் கூட்டுப் பேச்சுவார்த்தைகளை நடத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்-என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துகளின் விலைகளிலும் அதிகரிப்பு ஏற்படும் அபாயம்!

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை அடுத்து

கொழும்பு, ஜுன். 05

டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளதைத் தொடர்ந்து, மருந்துகளின் விலைகளையும் அதிகரிப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கு தேவையான ஆரம்பகட்ட பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த அதிகார சபையின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம குறிப்பிட்டார்.

இதற்கமைய, இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளின் விலைகளை அதிகரிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

அரசாங்க வர்த்தமானி மூலம் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள 60 மருந்து வகைகளின் விலைகளையும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம மேலும் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைவதால் அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரிப்பதை நாம் அறிவோம். அதற்கமைய, மருந்துகளின் விலைகளும் அதிகரிக்கக்கூடும். இது குறித்து ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நமது நாட்டில் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளே பயன்படுத்தப்படுகின்றன. அனைத்து மருந்துகளின் விலைகளும் அதிகரிக்காது, ஆனால் சில குறிப்பிட்ட மருந்துகளின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படும்-என்றார்.

# இலங்கையில் 20 வீதமான மாணவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிப்பு!

கொழும்பு, ஜுன். 06

இலங்கையில் ஐந்தில் ஒரு பாடசாலை மாணவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜசிங்க தெரிவித்துள் ளார்.

தேசிய ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பிற்காலத்தில் உடல் பருமன் ஏற்படும் அபாயமும் உள்ளது என்றும் அவர் இதன் போது எச்சரித்தார்.

ஐந்து வயதுக்குட்பட்ட மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகள் குறித்த அண்மைய கணக்கெடுப்புத் தரவுகளை மேற்கோள் காட்டி, வளர்ச்சி குன்றல் 10.1 வீதமாகவும், எடை குறைவு 16.1 வீதமாகவும் உள்ளது என்றும், அதே சமயம் அதிக எடை அளவு 0.5 வீதமாக ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெரியவர்களிடையே அதிகரித்து வரும் உடல் பருமன் விகிதங்கள் குறித்த கவலைகளை அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

உடல் பருமன் 47 வீத பெண்களையும் 30 வீத ஆண்களையும் பாதிக்கிறது என்றும், எதிர்காலத்தில் இந்த புள்ளிவிவரங்கள் முறையே 15 வீதம் மற்றும் 6 வீதமாக மாறும் என்று எதிர்பார்க் கப்படுகிறது என்றும் அவர் கூறினார். (அ)

# தியாகி பொன் சிவகுமாரனுடனான அனுபவப் பகிர்வு

சி.தவராசா,
முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்,
வடக்கு மாகாண சபை

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் ஓர் தீவிர தொண்டனாகக் கடமையாற்றிய பொன் சிவகுமாரன் அம் மாநாட்டின் இறுதி நாள் அன்று பொலிஸாரினால் நடத்தப்பட்ட அடாவடித்தனத்தினை நேரில் பார்வையிட்டதன் விளைவாக அதற்குப் பொறுப்பானவர்களைப் பழி வாங்கியே தீருவேனென்று அன்றே சபதமெடுத்துக் கொண்டவர்.

அவ் உள்ளக் கொதிப்பின் விளைவே தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதத்திற்குப் பொறுப்பதிகாரியாக இருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசிறி மீது சிவகுமாரன் குண்டு வீச்சு நடத்தி சுட முற்பட்டமைக்குக் காரணமாகும். அச் சம்பவம் வெற்றியளிக்காவிட்டாலும் எப்படியோ பழிவாங்கியே தீருவேன் என்ற முனைப்புடன் செயற்பட்டதன் விளைவே சிவகுமாரன் அத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்று ஆறு மாதத்திற்குள்ளேயே தன்னுயிரைப் பலி கொடுக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.

ஜனநாயகப் பாரம்பரிய வழியில் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது ஆயுதப் போராட்டத்தின் மூலமே அதனை அடைய முடியுமென்று 1970 களிலேயே ஆயுதப் போராட்டத்திற்கான வித்தினை இட்டவர் தியாகி சிவகுமாரன். அதுமட்டுமல்ல ஏற்கனவே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு அவர்களின் கைகளில் பட்ட அனுபவத்தின் விளைவாக பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவ்வாறு நிகழுமேயானால் தன்னுயிரை தானே மாய்த்துக்கொள்வேன் என்று பல முறை எங்களிடம் கூறியதனை நிரூபித்தும் காட்டியிருக்கின்றார்.

உரும்பிராயில் பொன்னுத்துரை அன்னலட்சுமி தம்பதியினரிற்கு 26.08.1950 ஆம் ஆண்டு நான்காவது புதல்வனாக உதித்த சிவகுமாரன் செல்லமாக "திரவியம்" என எல்லோராலும் அழைக்கப்படுவார். யாழ் இந்துக் கல்லூரியில் தனது படிப்பை முடித்துக் கொண்டு யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் அவர் கல்வி கற்கும் காலப்பகுதியில் தான் (1970ஆம் ஆண்டு ஆரம்பத்தில்) சிவகுமாரனுடனான நட்பு எனக்கு ஏற்பட்டது.

ரின்பால் பேணியில் வெடிகுண்டு செய்வது பற்றியெல்லாம் அப்போதே எம்முடன் பேசுவார். எங்களுக்கு இந்த கதைகள் புதிது. அதனால் ஆச்சரியமாக கேட்டுக்கொண்டிருப்போம். தனது வீட்டுக்கு எங்களை கூட்டிக் கொண்டு சென்று வெடிகுண்டு தயாரிப்பது பற்றி எங்களுக்கும் பழக்கினார்.

வல்வெட்டித்துறையில் குட்டிமணியினால் நடத்தப்பட்ட கோழிப்பண்ணைக்கு சென்று வெடிகுண்டுகள் தயாரிக்க பழகியுள்ளார் என்பதோடு அவரிடமிருந்து கந்தகம், பொட்டாசியம் போன்ற வெடிகுண்டு தயாரிக்கும் பொருள்களையும் பெற்றுக் கொண்டுள்ளார் என்பதனை பின்னர் நான் அறிந்து கொண்டேன்.

சிறிமா அரசில் கலாசார அலுவல்கள் பிரதியமைச்சராக இருந்த சோமவ சந்திரசிறி உரும்பிராயில் உள்ள பாடசாலையொன்றின் நிகழ்வொன்றிற்காக வந்திருந்தார். அவரது காரின் பின் ரயருக்கு கீழே குண்டை வைத்துள்ளார் சிவகுமாரன். பிரதியமைச்சர் மேடையில் பேச்சை முடித்ததும், சாரதி காரை இயக்கி, பின்னால் செலுத்த முயல, குண்டு வெடித்துள்ளது. வெடிகுண்டு தயாரிப்பின் முதல் காலகட்டம் அது. அவற்றால் பெரிய பாதிப்புக்கள் வராது.

அதனைத் தொடர்ந்த பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சிவகுமாரனை பிணையில் எடுப்பதற்காக அவரது தாயாருடன் பல இடங்களுக்கும் சென்று முயற்சிகள் செய்தேன். அப்போதைய சட்டத்தின்படி பிணையெடுப்பதென்றால் கொழும்பிலுள்ள மேல் நீதிமன்றத்திற்குதான் செல்ல வேண்டும். அப்பொழுது மாகாண மேல் நீதிமன்றங்கள் கிடையாது. மேல் நீதிமன்றங்களில் எல்லா சட்டத்தரணிகளும் வாதாடவும் முடியாது. இராணி சட்டத்தரணிகள் மட்டுமே முன்னிலையாக முடியும்.

சிவகுமாரனின் தாயாரும் நானும் அமிர்தலிங்கத்திடம் சென்று விடயத்தை சொன்னோம். நீலன் திருச்செல்வத்தின் தந்தையார் திருச்செல்வத்திற்கு ஒரு கடிதம் தந்து அனுப்பினார்.

கொழும்பிலிருந்த திருச்செல்வத்தின் வீட்டுக்கு சென்றோம். அது பெரியதொரு மாளிகை. அழைப்பு மணியை அழுத்த, வெளியில் வந்தார். கடிதத்தை கொடுத்தோம். படித்துவிட்டு, "எங்களை கேட்டோ குண்டு வைச்சனீங்கள்" என பேசினார். ஒரு மாதிரி அவரை சமாளித்து, அவரை ஆஜராக வைத்தோம். சிவகுமாரன் பிணையில் விடுதலையானார்.

அவர் விடுதலையான பின் ஒருநாள், பல்கலைக்கழகத்தில் தமிழ் மன்ற செயற்பபாடுகளில் ஈடுபட்டுப் படிப்பை முடித்து வந்திருக்கும் உரும்பிராயைச் சேர்ந்த நண்பர் ஒருவரை சந்திக்க வருமாறு சிவகுமாரன் கேட்டார். அந்த நண்பரும் போராட்டத்தில் தீவிர ஆர்வமுள்ளவர் என்றார். அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டவர் சத்தியசீலன் என்பவராவார்.

அக் காலகட்டத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசினால் பல்கலைக்கழக தரப்படுத்தல் முறை அறிமுகமானது. இன ரீதியான தரப்படுத்தல்தான் முதலில் அறிமுகமானது. இதனால் எனது பல்கலைக்கழக வாய்ப்பும் தவறியது. தரப்படுத்தலிற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென முடிவு செய்தோம். இது தொடர்பாக ஆர்வமுள்ளவர்களை இணைத்து ஒரு ஆலோசனை கூட்டம் நடத்தினோம். மலாயன் கபேக்கு மேலிருந்த மண்டபத்தில் கூட்டம் நடந்தது. சத்தியசீலன், மாவை, லோரன்ஸ், மகா உத்தமன், அரியரட்ணம் (புன்னாலைகட்டுவன்), இலங்கை மன்னன், முத்துகுமாரசுவாமி, சந்திரகுமார் (பிரான்ஸ்), சபாலிங்கம், பலநடராஜ ஐயர் எனப் பலர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். மாணவர் பேரவையெனச் செயற்படுவது, தரப்படுத்தலுக்கு எதிராக போராட்டம் செய்வதென முடிவு செய்தோம்.

இம் மாணவர் பேரவை உயர்தர மாணவர்கள் பலரை ஒன்று திரட்டி தரப்படுத்தலிற்கு எதிராக மாபெரும் ஊர்வலத்தினை நடத்தியது மட்டுமல்லாமல் அதனைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தினை தொடர்ந்து சுமந்து சென்ற அமைப்பாகவும் அமைகின்றது. மாணவர் பேரவையின் தரப்படுத்தலிற்கெதிரான போராட்டங்களில் சிவகுமாரனின் பங்களிப்பு அளப்பரியது.

1976ஆம் ஆண்டு சிங்கள அரசுடன் சேர்ந்து நடக்கும் தமிழ் அரசியல்வாதிகளை எதிர்க்க வேண்டுமென்ற நோக்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த அனுசரணையாகச் செயற்பட்ட யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவினைக் கொலை செய்வதற்கு யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசலையின் முன்பு எடுத்த முயற்சியும் வாகனம் சேதமடைந்ததோடு துரையப்பா காலதாமதமாக வந்ததால் உயிர்பிழைக்க வைத்தது. இக் கொலை முயற்சியைத் தொடர்ந்தும் சிவகுமாரன் யாழ் சிறையிலும், அநுராதபுரம் சிறையிலும் ஒன்றரை வருடங்களிற்கு மேலாகக் கைதியாக இருந்தார்.

பொலிஸ் தேடுதல்களிலிருந்து ஒழிந்து வாழ வேண்டிய நிலை மற்றும் தனது செயற்பாடுகளிற்கு நிதி ஒரு தடையாக இருந்த சூழலில் பலரிடம் சென்று நிதியுதவி கேட்டும் எல்லோரும் கைவிரித்த நிலையிலேயே கோப்பாய் கிராமிய வங்கியில் பணத்தைத் திருடுவதற்கு சிவகுமாரன் முடிவிற்கு வந்தார். அதுவும் அவ் வங்கியில் வேலை செய்த ஒரு ஊழியரின் தகவல்களின் அடிப்படையில்தான் அங்குள்ள பணத்தைக் கொள்ளையிடுவதற்குத் திட்டமிட்டார். இருந்தும் அச் செயற்பாடு அவரிற்குக் காலனாக மாறிவிட்டது. அக் கொள்ளைச் சம்பவத்திற்கு முன்பே தன்னிடமிருந்த சயனைட்டினைப் பாணில் நனைத்துக் காகத்திற்குக் கொடுத்து ஒத்திகை கூட சிவகுமாரன் பார்த்திருக்கின்றார்.

தினமும் தவறாது உடற்பயிற்சியில் ஈடுபடும் சிவகுமாரன் ஒரு நாள் காலை உயர்த்தித் தூக்கி உடற்பயிற்சி செய்யும்போது கதவின் மேற்புறத்திலிருந்த திறாங்கு அவரின் காலில் குற்றி ஓர் காயத்தை ஏற்படுத்தியிருந்தது. வங்கியில் கொள்ளையிட முற்பட்ட போது உசாரடைந்த ஊழியர்களின் செயற்பாட்டினால் இவர்கள் வங்கியிலிருந்து ஓடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பொலிஸாரும் பின் தொடரவே தோட்டங்கவிற்கு ஏற சிவகுமாரன் காலில் ஏற்கனவே இருந்த காயத்தில் மரவள்ளிக் கட்டை ஏறியதன் விளைவாகத் தொடர்ந்து ஓட முடியாமல் நின்ற போது பொலிஸார் அவரை நெருங்கியபோது சிவகுமாரன் அப் பொலிஸினுடைய தன்னியக்கத் துப்பாக்கியினைப் பறித்து அவரைச் சுட முயன்றிருக்கிறார். அப்போது அப் பொலிஸ் அதிகாரி தனக்கு மூன்று பெண் பிள்ளைகள் என்றும் அவர்களுடைய தாயாரும் இறந்து விட்டதாகவும் தானும் இறந்தால் அப்பிள்ளைகள் அநாதைகளாகி விடுவார்களென்று கெஞ்சியதன் அடிப்படையில் (சிவகுமாரன் அநுராதபுரம் சிறையிலிருந்த காலங்களில் சிங்களம் பேசுவதற்கு நன்கு கற்றுக் கொண்டவர்) சிவகுமாரன் அவரைச் சுடாது தன்னிடமிருந்த சயனைட்டை தானே அருந்தித் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

சிவகுமாரன் வைத்தியசாலையில் இறந்த பின்பு அவரது கைக் கடிகாரம் மற்றும் அவரது காற்சட்டைப் பையிலிருந்த பணம் ஆகியவற்றை சிவகுமாரனின் தந்தையிடம் கையளித்துவிட்டு "உங்கள் மகன் ஓர் தெய்வப் பிறவி நினைத்திருந்தால் என்னைச் சுட்டிருக்கலாம்" எனக் கூறி அவரது காலில் வீழ்ந்து வணங்கியுள்ளார் அந்த பொலிஸ்காரர்.

சிவகுமாரன் ஓர் ஆயுதப் போராளி மட்டுமல்ல. தமிழர்கள் மத்தியிலிருந்த சீர்கேடுகளை, குறிப்பாக சாதிக் கொடுமைகளை இள வயதிலுருந்தே எதிர்த்து வந்த ஒருவர். தன் இளம் வயதிலேயே உரும்பிராய் வைரவர் கோவிலில் சம்பந்தி போஷனத்தை நடத்தி இளைஞர்களிடையே எழுச்சியை உருவாக்கியவர். அத்துடன் மரண வீடுகளில் பறை மேளம் அடிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற முயற்சியில் உரும்பிராயிலுள்ள அச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடி பறை மேளங்களை உரும்பிராய் சந்தியில் போட்டு உடைத்து எரித்தார்.

தமிழ் மக்கள் போராட்ட வளர்ச்சி என்பது ஒரு வகையான அஞ்சலோட்டம். அந்த அஞ்சலோட்டத்தில் ஆயுதப் போராட்டமென்ற அஞ்சலோட்டத்தை ஆரம்பித்து வைத்தது சிவகுமாரனென்றால் அது மிகையாகாது. தியாகி சிவகுமாரன் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தின் வரலாற்றுச் சின்னமாக நிலைத்து நிற்பானென்பது திண்ணம்.

தியாகி சிவகுமாரனின் உருவச்சிலை உரும்பிராயில் மூன்று தடவைகள் அமைக்கப்பட்டு இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட நிலையில் வெண்கலத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட நான்காவது சிலையே இன்று உரும்பிராய் சந்தை வளாகத்தில் காணப்படுகின்றது. அவரது உடல் தகனம் செய்யப்பட்ட வேம்படி மயானத்தில் நினைவுத் தூபியும் அமைந்துள்ளது. அவரது 52ஆவது ஆண்டு நினைவு தினம் வழமை போன்று ஜுன் 5 ஆம் திகதி உரும்பிராய் சிலை மற்றும் தூபி அமைந்துள்ள இடங்களில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### எதிரணியினர் பொய்...

எனப் பிரசாரம் செய்தன. இவ்வாறு அடுத்தடுத்து மாதங்களைக் குறிப்பிட்டுக்கொண்டு எதிரணி உறுப்பினர்கள் போலி அரசியல் நடத்தி வருகின்றனர்.

தமக்கு எஞ்சியுள்ள கட்சியின் ஆதரவாளர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், தங்களின் அரசியல் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் மட்டுமே நாடு வீழும், அரசு கவிழும் என்றெல்லாம் கதைகளை சோடித்துக் கூறி வருகின்றனர்.

எதிரணியினரால் "திருடர்களைப் பிடிப்போம், ஊழலினை ஒழிப்போம், மக்களுக்குப் பொருளாதார நிவாரணங்களை வழங்குவோம்" என்று மேடைகளில் கூற முடியாது. ஏனெனில் மக்கள் அவர்களை நம்ப மாட்டார்கள். அதனால்தான், பொருளாதார வீழ்ச்சி பற்றிப் பேசி, மாதங்களைக் கணக்குக் காட்டி நாள்களைக் கடத்தி வருகின்றனர்.

இதுதான் அவர்களின் தற்போதைய அரசியல் பாணி. அதற்கு நாம் வழிவிடுவோம், அது பற்றி நாம் எவ்விதத்திலும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை-என்றார். (அ)

### செம்மணி புதைகுழியில்...

அடையாளம் காணப்பட்ட என்புக்கூட்டில் 07 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 283 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் 279 என்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

### தீவக மக்களுக்கு...

கட்டமைப்புடன் இணைக்கப்படாத இந்தத் தனித் தனி தீவுப் பகுதி மக்களுக்கு நம்பகமான மற்றும் தூய்மையான பசுமை ஆற்றலை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட இந்த திட்டமானது, சூரிய சக்தி, காற்றாலை, மின்கலச் சேமிப்பு மற்றும் அவசரத் தேவைகளுக்கான டீசல் மின்பிறப்பாக்கி வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக 4.3 மெகாவோல்ட் மின் உற்பத்தித் திறனுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிலையானதொரு எதிர்காலத்தை இலக்காகக் கொண்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் ஒகஸ்டில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இந்த ஆண்டின் இறுதிக்குள் ஒட்டுமொத்தத் திட்டத்தினதும் முழுமையான செயல்பாடுகள் அனைத்தும் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அரசாங்கத்தின் இந்த நிதிப் பங்களிப்பானது, தீவக மக்களின் அன்றாட மின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் அவர்களின் பொருளாதார வாழ்வாதார மேம்பாட்டுக்கும் பெரும் பக்கபலமாக அமையும் என உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

### இலங்கை தமிழர்...

ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும், வடக்கு மாகாணத்தின் கல்வித் துறையை மேலும் மேம்படுத்துவதற்கான பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் ஆலோசகர், தலைவர் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ-05)

### எழுச்சிப் பாடல்...

சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழு, குறித்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 31 ஆம்திகதி நாவற்குழிப் பகுதியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பாடப்பட்ட பாடல்களை, குறித்த இளைஞர் தனது சமூக வலைத்தளக் கணக்கில் புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் வகையில் எடிட் செய்து, சுயமாகக் குரல் பதிவு செய்து பதிவேற்றிய குற்றத்தில் கைது செய்யப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் புதன்கிழமை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிந்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்திய நிலையில், அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

அதனடிப்படையில், குறித்த கலைஞன் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (அ)

### சர்வாதிகாரத்தை...

ராஜகருணா குற்றஞ்சுமத்தினார்.

பெலவத்தையின் நேரடித் தலையீட்டின் கீழ் மாகாணசபைகளும், பிரதேச செயலகங்களும் சிதைக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டிய அவர், நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கும் தேவையான உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி

## வலி.கிழக்கு தவிசாளரிடம் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன். 05

தியாகி பொன் சிவகுமாரனின் நினைவேந்தல் தொடர்பில், நினைவேந்தல் குழுவைச் சேர்ந்த செந்தூரன் குழுவினர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷிடமும், நினைவேந்தல் குழுவினரிடமும், கோப்பாய் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

சிவகுமாரனின் 52 ஆவது நினைவேந்தல், உரும்பிராய் சந்தியில் உள்ள திருவுருவச்சிலையில், இன்று காலை 8.00 மணிக்கு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நினைவேந்தல் குழுவினர், தாமும் நினைவேந்தல் மேற்கொள்ள இடமளிக்கப்பட வேண்டும் என முறைப்பாடு செய்தனர்.

அதற்கமைய, இரு தரப்பினரிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. (அ)

அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அரசாங்கம் நாட்டின் ஜனநாயகத்தைச் சுருக்கி, சர்வாதிகாரப் பாதையை நோக்கிச் செல்ல முயற்சிக்கிறது. மாகாண சபைத் தேர்தல் பற்றி யோசிப்பது கூட இல்லை. தேர்தல் மேடைகளிலும் தங்களது கொள்கைப் பிரகடனத்திலும் குறிப்பிட்ட காலத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என்று கூறினார்கள். ஆனால் இப்போது இரண்டு வருடங்களாகியும் தேர்தலை நடத்தாமல் ஏமாற்றி வருகின்றனர்.

ஜனநாயகக் கட்டமைப்பில் தேர்தல் நடத்துவது மிக முக்கியமான ஒன்றாகும். ஆனால் அதற்குத் தேவையான சீர்திருத்தங்களையோ அல்லது ஆதரவையோ பாராளுமன்றத்தில் வழங்குவதாகத் தெரியவில்லை. பல்வேறு சாட்டுக்களைக் கூறி தேர்தலை காலம் தாழ்த்த முயற்சிக்கிறார்கள்.

தேர்தல்களை நடத்தாதது மட்டுமன்றி, பெலவத்தையின் தலையீடு அனைத்துத் துறைகளிலும் காணப்படுகிறது. இன்று சுயாதீன ஆணைக்குழுக்கள் என்று எதுவும் இல்லை. பெலவத்தையின் சக்திகள் சுயாதீன ஆணைக்குழுக்களுக்குள் நுழைந்து அவற்றின் சுயாதீனத் தன்மையை அழித்து வருகின்றன.

அதேபோல், உயர் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை மாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள். மேல் நீதிமன்ற நீதிபதிகள் 63 வயதிலும், உயர்நீதிமன்ற நீதிபதிகள் 65 வயதிலும் ஓய்வுபெற வேண்டும் என்று அரசியலமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 20 ஆவது திருத்தத்தின் மூலம் நீதிபதிகளின் எண்ணிக்கை மேல் நீதிமன்றத்தில் 12 இல் இருந்து 20 ஆகவும், உயர் நீதிமன்றத்தில் 11 இல் இருந்து 17 ஆகவும் அதிகரிக்கப்பட்டது.

இந்த அமைப்பிற்குள் தலையிட்டு நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்க இவர்கள் முயற்சிக்கிறார்கள். இதற்கு சட்டத்தரணிகள் சங்கமும் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. ஏன் இந்த சுயாதீன நிறுவனங்களுக்குள் தலையிடுகிறார்கள்? இவர்களுக்கு சுயாதீன நிறுவனங்களை வைத்திருக்க விருப்பமில்லை. அனைத்தையும் பெலவத்தையின் கீழ் கொண்டுவந்து கட்டுப்படுத்தவே பார்க்கிறார்கள்.

இன்று மாகாண சபைகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. ஜனாதிபதியின் ஆளுநர்களே இருக்கிறார்கள். அவர்கள் பெயரளவில் மட்டுமே ஆளுநர்களாக இருக்கிறார்கள். மாகாண சபைகள் முழுமையாகப் பெலவத்தையினால் நியமிக்கப்பட்ட நபர்களாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றன-என்றார். (அ)

### அரசியலுக்காக...

பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில், கிளிநொச்சியைச் சேர்ந்த இளம் கலைஞர் ஒருவர், தனது "ராப்" பாடல் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய உள்ளடக்கங்களைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் கீழ், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இசை மற்றும் கலைசார் வெளிப்பாடுகள் பயங்கரவாதம் சார்ந்த குற்றங்களாகக் கருதப்படுமாயின், அண்மையில் நிறைவடைந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரங்களின் போது தேசிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகள் புலிகள் அமைப்பின் பாடல்களைப் பயன்படுத்திய போது இதே சட்டங்கள் ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை என அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், அரசியல் இலாபங்களுக்காக இவ்வாறான பாடல்களைச் சமூக ஊடகங்களில் பகிரங்கமாகப் பகிர்ந்திருந்தார். அப்படியாயின், அப்போது பொலிஸ் எங்கே இருந்தது? பயங்கரவாதத் தடைச்சட்டம் எங்கே போனது? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

சட்டத்தின்படி விடுதலைப்புலிகள் [illegible] ஒரு [illegible] மாகும். அந்த அமைப்பின் கொள்கைகளை

எவரும் பரப்புவதையோ அல்லது மகிமைப்படுத்துவதையோ நாம் ஆதரிக்கவில்லை என்பதில் எமது நிலைப்பாடு தெளிவானது.

எனினும், ஒரு அரசாங்க பாராளுமன்ற உறுப்பினரும், ஒரு சாதாரண இளம் கலைஞரும் ஒரே மாதிரியான செயலைச் செய்ததாகக் குற்றம் சுமத்தப்படும் போது, ஒருவருக்கு அரசியல் பாதுகாப்பும், மற்றவருக்குப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதும் வழங்கப்படுவது முற்றிலும் தவறானதாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டமானது அரசியல் வசதிகளுக்கு ஏற்ப வளைக்கப்படக் கூடாது. அரசியல்வாதிகளுக்கு ஒரு நீதியும், சாதாரண இளைஞர்களுக்கு வேறொரு நீதியும் வழங்குவதை ஒரு ஜனநாயக சமூகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறான செயல்கள் சட்டவிரோதமானவை என அரசாங்கம் கருதினால், அரசியல் பின்னணிகளைப் பாராது பொறுப்புக்கூறல் என்பது சட்டத்தின் முன்னால் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில், இந்தக் கைது நடவடிக்கையானது அதிகாரத்தைத் திட்டமிட்டுத் தவறாகப் பயன்படுத்திய ஒரு செயலாகவே பார்க்கப்படும் என நாமல் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

### அவசர ஆட்சி...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமென்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமாகும். ஜனநாயக நாடொன்றில் மக்கள் வழங்கிய பதவிக் காலம் நிறைவடையும்வரை அரசாங்கம் இருக்கவேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

ஒரு கட்சி அதிகாரத்துக்கு வந்தால், பதவியேற்ற நாள் முதலே அதனை கவிழ்ப்பதற்கு முற்படக்கூடாது. இதுவரை காலமும் எமது நாட்டின் வளர்ச்சிக்கு இதுவும் ஒரு தடையாக இருந்தது எனலாம். ஜே.வி.பியே இதனை அதிகம் செய்துள்ளது. இந்நிலைமை மாறவேண்டும்.

இதற்காக அரசாங்கம் செய்யும் தவறுகளையெல்லாம் அனுமதிக்க வேண்டும் என்றில்லை. அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டி, மக்களுக்காக முன்னிலையாகும் வேலையையே நாம் கூட்டு எதிரணியாக செய்துவருகின்றோம். ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அவசரம் காட்டவில்லை-என்றார். (அ)

### தமிழரசுவின்...

மைத்திரி ,சந்திரிகா, ரணில் ஆட்சியைப் போல் அநுர ஆட்சியிலும் சுதந்திரமாக பாடமுடியவில்லை-பேச முடியவில்லை. விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நோக்கில் பாடல் பாடியதாக தெரிவித்து கைது செய்யப்பட்டு 16நாட்கள் சிறையில் கிளிநொச்சி இளைஞன் அடைக்கப்பட்டுள்ளார்.ஆட்சி மாறினாலும் தொடர்ந்து இனவாதமே காணப்படுகின்றது.

தமிழரசுக்கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் தனது அதிப்தி கடிதத்தை எனக்கும் அனுப்பியுள்ளார். நீண்ட காலமாக தமிழரசுக் கட்சியை தக்க வைக்கும் நோக்குடன் பதவிகள் ஒன்றும் பெறாது பாடுபட்டவருக்கு பாராளுமன்ற தேர்தலின் பின்பு கிடைக்கப்பட்ட தேசிய பட்டியல் ஆசனத்தை ஒரு ஆண்டுக்கு வழங்க வேண்டும் என நான் அரசியல் குழுவிடம் பிரேரித்திருந்தேன். கட்சி பிரச்னையை கட்சிக்குள்ளே தீர்க்க முயற்சிப்போம்-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## 25 அத்தியாவசியப் பொருள்கள் சதொசவின் ஊடாக இறக்குமதி

கொழும்பு, ஜூன். 05

பொதுமக்களுக்கு தரமான நுகர்பொருள்களை நியாயமான விலையில் வழங்குவதை உறுதி செய்யும் நோக்கில், லங்கா சதொச நிறுவனம் ஊடாக 25 அத்தியாவசிய நுகர் பொருள்களை நேரடியாக இறக்குமதி செய்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசேகர ,தற்போது சந்தையில் கிடைக்கப்பெறும் சில அத்தியாவசியப் பொருள்களின் தரம் குறித்து நுகர்வோர் மத்தியில் எழுந்துள்ள கவலைகளுக்குத் தீர்வு காண்பதே இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

அத்துடன், வர்த்தக சந்தையில் இடைத்தரகர்கள் காரணமாக நுகர்பொருள்களுக்கு ஏற்படும் கூடுதல் செலவீனங்களைக் குறைத்து, அதன் மூலம் பொதுமக்களுக்குக் கூடுதல் நிதிச்சுமை ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இந்த நேரடி இறக்குமதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த புதிய இறக்குமதிப் பொறிமுறையின் ஊடாக, தரம் வாய்ந்த அத்தியாவசியப் பொருள்கள் எவ்வித தட்டுப்பாடுமன்றி மிகவும் மலிவான விலையில் நுகர்வோரைச் சென்றடையும் என அமைச்சு எதிர்பார்க்கிறது. (அ)

**வவுனியாவில் தாக்குதல்:**

## 7 மாணவர்கள் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில்!

வவுனியா, ஜூன். 05

வவுனியா, இரட்டைப்பெரியகுளம் குளத்துக்கு அருகில் இரண்டு மாணவர்கள் மீது கொடூரமான முறையில் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் 14 முதல் 17 வயதுக்குட்பட்ட 7 மாணவர்கள் இரட்டைப்பெரியகுளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமூக ஊடகங்களில் "வவுனியா சிங்கித்தி பாதாளய" என்ற தலைப்பில் இந்தத் தாக்குதல் தொடர்பான காணொளி காட்சிகள் பரவியதைத் தொடர்ந்தே பொலிஸார் இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த 15 வயதுடைய இரண்டு மாணவர்கள் தற்போது வவுனியா பொது மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட 7 மாணவர்களும் நேற்று முன்தினம் வவுனியா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை கெபிற்றிக்கொலாவ சான்றளிக்கப்பட்ட சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரட்டைப்பெரியகுளம் பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஜூலை மாதத்துக்குள் எரிபொருள் இறக்குமதிச் செலவினம் குறையும்!

**பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்பார்ப்பு**



கொழும்பு, ஜூன். 05

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை ஸ்திரமாக இருக்கும் பட்சத்தில் அல்லது மேலும் வீழ்ச்சியடையும் பட்சத்தில், இலங்கையின் எரிபொருள் இறக்குமதிச் செலவு எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் கணிசமாகக் குறையும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

நாட்டின் எரிபொருள் இறக்குமதி செலவுகள் குறித்து கருத்து தெரிவித்த அவர், சர்வதேச சந்தையில் நிலவிய அதிக விலை மற்றும் மின் உற்பத்திக்குத் தேவையான கூடுதல் எரிபொருள் இறக்குமதி காரணமாக, கடந்த மாதங்களில் எரிபொருளுக்கான டொலர் வெளிச்செல்லுகை கடுமையாக அதிகரித்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

வழக்கமாக எரிபொருள் இறக்குமதிக்காக மாதத்துக்கு சராசரியாக 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும் நிலையில், கடந்த ஏப்ரல் மாதத்தில் இந்த செலவினம் 522 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்ததுடன், இதற்கான கொடுப்பனவு மே மாதத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் கொள்வனவுக்காக நாட்டிலிருந்து அதிகளவிலான டொலர் வெளியேறிய மாதமாக கடந்த மாதம் பதிவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஏப்ரல் மாதத்தில் 11 எரிபொருள் கப்பல்கள் அதிக விலைக்கு இறக்குமதி செய்யப்பட்டதுடன், மின் உற்பத்திக்காக மட்டும் ஒரு கூடுதல் டீசல் கப்பல் அதிக விலைக்கு இறக்குமதி செய்யப்பட்டதே இந்த செலவின அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

இருப்பினும், தற்போது இந்த மாதாந்த எரிபொருள் இறக்குமதி செலவுகளைக் குறைப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், 522 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்திருந்த செலவினம், இந்த மாதத்தில் சுமார் 318 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்துள்ளதாகவும், எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் இதனை மேலும் 198 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை குறைக்க முடியும் என மதிப்பிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகளுக்குத் தேவையான அனைத்து மசகு எண்ணெய் விநியோகமும் தற்போது சீராகக் கிடைத்துள்ளதே இந்த செலவு குறைப்புக்கான முக்கிய காரணமாகும்.

உலக சந்தையில் டீசல் விலை படிப்படியாகக் குறைந்து வருவதால், இலங்கையினால் எரிபொருள் இறக்குமதிச் செலவுகளை எவ்வித சிரமமுமின்றி முகாமைத்துவம் செய்ய முடியும் என தலைவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், ஜூலை மாதத்துக்குப் பின்னரான நிலைமை சர்வதேச சந்தையின் போக்குகள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்களைப் பொறுத்தே அமையும் என அவர் எச்சரித்துள்ளார். (அ)

## அரச அதிகாரிகளின் எரிபொருள் கொடுப்பனவை உடன் திருத்துமாறு நிதி அமைச்சிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 05

அண்மைய எரிபொருள் விலை உயர்வுகளுக்கு இணையாக எரிபொருள் கொடுப்பனவுகள் திருத்தியமைக்கப்படாமையினால், அதைப் பெற்றுக்கொள்ளும் அரச அதிகாரிகள் கடுமையான நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுச் சந்தையில் எரிபொருள்களின் விலைகள் பலமுறை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், கடந்த மார்ச் 01ஆம் திகதி நிலவிய எரிபொருள் விலைகளின் அடிப்படையிலேயே நிதி அமைச்சினால் எரிபொருள் கொடுப்பனவுக்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக மருத்துவர் சமல் சஞ்சீவ சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக, கடமைகளுக்காகத் தங்களது சொந்த வாகனங்கள் அல்லது உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்தும் அரச அதிகாரிகள் மாதாந்தம் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

தமது உத்தியோகபூர்வ கடமைகளுக்காக வீடுகளில் இருந்தோ அல்லது பணியிடங்களில் இருந்தோ பல்வேறு பிரதேசங்களுக்குப் பயணிக்கும் போது, தங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை விடவும் கணிசமான அளவு கூடுதல் தொகையை அரச அதிகாரிகள் சொந்தமாகச் செலவிட வேண்டியுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள அரச அதிகாரிகளின் சுமையைக் குறைக்கும் வகையில், நிதி அமைச்சு இந்த விவகாரம் குறித்து உடனடி அவதானம் செலுத்த வேண்டும் என மருத்துவர் சமல் சஞ்சீவ வலியுறுத்தியுள்ளார். (அ)

## நெருக்கடி நிலையில் ஓட்டோச் சாரதிகள்!

கொழும்பு, ஜூன். 05

அரசாங்கத்தின் தொடர்ச்சியான எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக, உள்நாட்டு ஓட்டோ தொழில் பாரிய வீழ்ச்சியை நோக்கிச் செல்வதாக தேசிய ரக்ஸி செயலி ஓட்டோ கூட்டமைப்பின் தலைவர் ஜாஸ்மின் லங்கா தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கமும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும், எளிய மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்றே இந்தத் துறையில் உள்ள பலர் எதிர்பார்த்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள்களின் விலைகள் தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருவதானது, ஓட்டோ தொழிலை நலிவடையச் செய்யும் வகையில் அமைந்துள்ளதாக ஜாஸ்மின் லங்கா குற்றம் சுமத்தியுள்ளார்.

விலைத் திருத்தங்களின் போது, ஓட்டோ ஓட்டுநர்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பொருளாதாரக் கஷ்டங்கள் குறித்து உரிய அதிகாரிகள் போதிய கவனம் செலுத்தவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, ஒரு லீட்டர் பெற்றோலின் விலை 434 ரூபாயாக உயர்ந்துள்ள சூழலில், சாதாரண ஓட்டுநர்களின் தினசரி வருமானம் கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது நடைமுறையிலுள்ள கியூ.ஆர். குறியீட்டு முறையின் கீழ், ஓட்டோக்களுக்கு வாராந்தம் 20 லீற்றர் பெற்றோல் மாத்திரமே வழங்கப்படுவது போதாது என தொழிற்சங்கம் விமர்சித்துள்ளது.

"ரக்ஸி செயலிகள் மூலம் தொழில் செய்யும் ஒரு முச்சக்கர வண்டி ஓட்டுநருக்கு வாரத்திற்கு குறைந்தபட்சம் 50 லீற்றர் எரிபொருளாவது தேவைப்படுகிறது. தற்போதைய கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் ஓட்டுநர்கள் தங்களின் அன்றாடப் பிழைப்பை முன்னெடுப்பது கடினமாக உள்ளது" என ஜாஸ்மின் லங்கா குறிப்பிட்டுள்ளார். (அ)

## மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 05

முல்லைத்தீவு முதல் காங்கேசன்துறை, மன்னார், புத்தளம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் நிலைமை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் செம்மஞ்சள் நிற எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை நேற்று முற்பகல் 10.30 மணி முதல் இன்று முற்பகல் 10.30 மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 60 முதல் 65 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், கடல் அலைகளின் உயரம் சுமார் 2 முதல் 3 மீற்றர் வரை உயர்வதற்குக் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக திணைக்களம் கணித்துள்ளது.

குறித்த கடற்பரப்புகள் கடுமையான கொந்தளிப்புடன் காணப்படலாம் என்பதால், கடற்படையினரும் கடற்றொழிலாளர்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.